யா/ ஹாட்லி கல்லூரி, பருத்தித்துறை.
J/ Hartley College, Point Pedro.
J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College J/Hartley College

# முதலாம் தவணைப் பரீட்சை-2020
# First Term Examination-2020

| | | | |
|---|---|---|---|
| தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல் I, II<br>Information & Communication Technology I, II | T | I, II | இரண்டு மணித்தியாலம்<br>Two Hours |

**தரம் 6** **தகவல் தொடர்பாடல் தொழினுட்பவியல்**

பகுதி I

மிகப் பொருத்தமான விடையின் கீழ் கோடிடுக.

01. கணினி முறைமைக்கு தரவுகளை வழங்கும் யாதேனும் ஒரு சாதனம்
    1. உள்ளீட்டு சாதனம் 2. வருவிளைவு சாதனம் 3. தேக்க சாதனம் 4. கணிப்பீட்டு சாதனம்
02. கணினி மென்பொருளுக்கு உதாரணமாக அமைவது
    1. தெரிவிப்பி 2. பணிசெயல்முறைமை 3. சுட்டி 4. அச்சுப்பொறி
03. கணினி வன்பொருளுக்கு உதாரணமாக அமைவது
    1. வலைமேலோடி 2. தரவு 3. பணிசெயல்முறைமை 4. தெரிவிப்பி
04. அறிக்கை தயாரித்தலுக்கு பயன்படும் பிரயோக மென்பொருள் பின்வருவனவற்றள் எது ?
    1. வரைவியல் மென்பொருள் 3. விரிதாள் மென்பொருள்
    2. சொல்முறைவழிப்படுத்தல் 4. வலைமேலோடி
05. பின்வருவனவற்றுள் கணினிச் செய்நிரல் எது ?
    1. உள்ளீடு 2. பணிச்செயல்முறைமை 3. வன்பொருள் 4. வருவிளைவு
06. பின்வருவனவற்றுள் பணிசெயல் முறைமையின் தொழில் அல்லாதது எது?
    1. பயனருக்கும் கணனிக்கும் இடையே தொடர்பை ஏற்படுத்துதல்
    2. நினைவகத்தை முகாமை செய்தல்
    3. கோப்புக்களைக் கையாளுதல்
    4. நச்சு நிரல்களில் இருந்து கணனியைப் பாதுகாத்தல்
07. கணினியின் சிறப்பியல்புகளுள் ஒன்று
    1. அதிக வேகம் 2. மாறும் தன்மை 3. நுண்மதி 4. பொருத்தம்
08. பின்வரும் சாதனங்களுள் உட்பொதிந்த கணனித் தொகுதியினைக் கொண்டிருப்பது எது ?
    1. சாவிப்பலகை 2. இறுவட்டு 3. சலவை இயந்திரம் 4. நுணுக்குப்பன்னி
09. தொடர்பாடல் சாதனங்களுள் ஒன்று
    1. உள்வன் வட்டு 3. இலக்கமுறைக் கணினி
    2. வலையமைப்பு இடைமுக அட்டை 4. வருடி
10. வளர்மதி கணினி ஒன்றைப் பயன்படுத்தி எழுத்தாவணம் ஒன்றைத் தயாரப்படுத்துகின்றார். வளர்மதியின் ஆவண தயார்ப்படுத்தலுக்கு உதவும் பிரயோக மென்பொருள் எது
    1. பதிப்பிக்கும் மென்பொருள் 3. சொல்முறைவழிப்படுத்தல் மென்பொருள்

2. வரைவியல் மென்பொருள் 4. ஊடக இயக்க மென்பொருள்

11. " பெரிலியம் " எனப்படும் இலத்திரனியல் கழிவுப் பொருளானது உடலில் சேருவதால் ஏற்படும் நோய் எது

1. இதயத் பாதிப்பு 2. தசைப் பலவினம் 3. நுரையீரல் புற்றுநோய் 4. மூளை வீக்கமடைதல்

12. பின்வருவனவற்றுள் சரியான கொண்ணிலை எது ?

1. கண்ணிற்கும் தெரிவிப்பிக்கும் இடையில் 100 m இடைவெளி இருத்தல்
2. முதுகை வளைத்து அமர்ந்து கொள்ளல்
3. சாவிப்பலகை, சுட்டி ஆகியவற்றை முழங்கைக்கு நேராக வைத்தல்.
4. பாதங்களை உயர்த்தி இருத்தல்

13. இலத்திரனியல் கழிவுப் பொருட்களை அகற்றுவதற்கு ஏற்றுக்கொள்ளப்பட்ட முறையாகக் கருதக்கூடியது

1. நச்சுநிரல் 2. 3 R 3. கடவுச் சொல் 4. மின்னஞ்சல் முகவரி

14. பின்வருவனவற்றுள் வருவிளைவுச் சாதனமாக அமைவது

1. பட்டைகுறிவாசிப்பான் 2. சுட்டி 3. பல்லுஸடக ஏறியி 4. மொடெம்

15. கணினியின் மூளை என வர்ணிக்கப்படுவது

1. தாய்பலகை 2. மையமுறைவழி அலகு 3. தெரிவிப்பி 4. முதன்மை நினைவகம்

16. சுப்பர்மாக்கெட்டுகளில் பயன்படுத்தப்பட்டு வரும் பிரதான உள்ளீட்டு சாதனம் எது

1. வருடி 2. பட்டைகுறிமுறை வாசிப்பான் 3. தொடுதிரை 4. பல்லூடக ஏறியி

17. எந்திரன் தொழில்னுட்பவியலைப் பயன்படுத்தி பணிகள் ஆற்றப்படும் பிரதான துறையாக விளங்குவது

1. போக்குவரத்து 2. கல்வி 3. தொழிற்சாலை 4. விவசாயப்பண்ணை

18. கணனியின் தந்தை எனக் குறிப்பிடப்படுபவர் யார்?

1. அடா லவ்லேஸ் 2. மார்க்கோணி 3. சாள்ஸ்பபேஜ் 4. அலெக்சாண்டர்

19. பின்வருவனவற்றுள் உள்ளீட்டு சாதனம் எது

1. அச்சுப்பொறி 2. சாவிப்பலகை 3. ஒலிப்பான் 4. தெரிவிப்பி

20. பின்வருவனவற்றுள் தேக்க சாதனங்களாகக் கருதப்படக் கூடியது

1. தெரிவிப்பி 2. இறுவட்டு 3. சுட்டி 4. சாவிப்பலகை

**(40 புள்ளிகள்)**

## பகுதி II

*எவையேனும் ஐந்து வினாக்களுக்கு விடையளிக்குக.*

01] உள்ளீடு → A → B

*01.* A,B *யின் தொழிற்பாட்டை குறிப்பிடுக ?*
*02.* *தொழிற்பாடு* B *யிற்கு பயன்படும் சாதனங்கள் 3 இனைக் குறிப்பிடுக ?*
*03.* *கணினியின் தொழில்கள் இரண்டினைக் குறிப்பிடுக ?*
*04.* *முறைவழிப்படுத்தல் செயற்பாட்டிற்காக உள்ளீடு செய்யப்படும் உள்ளீடுகள் எவை ?*

***( 12 புள்ளிகள்)***

*02]* *01.* *கணினி என்றால் என்ன ?*
*02.* *கணினியின் சிறப்பியல்புகள் 3 தருக?*
*03.* *கணினி உட்பொதிந்த சாதனங்களுக்கு 3 உதாரணம் தருக ?*
*04.* *தொடர்பாடற் சாதனங்கள் 3 தருக ?*

***( 12 புள்ளிகள்)***

*03]* *01.* *மென்பொருள் என்றால் என்ன ?*
*02.* *அன்றாட செயற்பாடுகளுக்காக கணினியில் நீர் பயன்படுத்தும் மென்பொருள் யாதாயினும் 3 ஐத் தருக ?*
*03.* *பிரதான நினைவகம் வேறு எப் பெயரால் அழைக்கப்படுவது ?*
*04.* *வன்பொருளுக்கும் மென்பொருளுக்கும் இடையிலுள்ள வேறுபாடுகள் 2 இனைத் தருக ?*

***( 12 புள்ளிகள்)***

*04]* *01.* *கணினி பயன்படுத்தப்படும் துறைகள் 3 இனைத் தருக ?*
*02.* *உமது பாடசாலையில் கணினி பயன்படுத்தப்படும் சந்தர்ப்பங்கள் 3 இனைத் குறிப்பிடுக?*
*03.* *வங்கியில் நிகழும் கணினிப் பயன்பாடுகள் 3 இனைக் குறிப்பிடுக ?*
*04.* *மருத்துவமனையில் உட்பொதிந்த கணினி உள்ள சாதனங்கள் பயன்படுத்தும் சந்தர்ப்பங்கள் 3 இனைக் குறிப்பிடுக ?*

***( 12 புள்ளிகள்)***

*05]* *" கணினி ஆய்வுகூடத்தை முறையாகவும் பாதுகாப்பாகவும் கையாளல் வேண்டும்"*
*01.* *கணினி ஒழுக்கவியல் என்பது யாது ?*
*02.* *கணினி ஒழுக்கவியல் கோவையில் இடம்பெறும் இரண்டு விடயங்களைக் குறிப்பிடுக ?*
*03.* *கணினி ஆய்வுகூடத்தில் உங்கள் பாதுகாப்புக்காக நீர் மேற்கொள்ள வேண்டிய நடவடிக்கைகள் 3 தருக ?*
*04.* *கணினி சாதனங்களை பாதுகாப்பதற்காக ஆய்வுகூடத்தில் நீர் பின்பற்றும் வழிமுறைகள் 3 குறிப்பிடுக ?*

***( 12 புள்ளிகள்)***

*06]* *01.* *கணினியைப் பயன்படுத்தும் போது பின்பற்ற வேண்டிய சரியான கொண்ணிலை 3 தருக ?*
*02.* *இலத்திரனியல் கழிவுப் பொருள் என்றால் என்ன ?*
*03.* 3R *முறைகள் மூன்றினையும் குறிப்பிடுக ?*
*04.* *கணினியின் இலத்திரனியல் பொருட்கள் உடலில் சேருவதால் ஏற்படக்கூடிய பாதகங்கள் 3 குறிப்பிடுக ?*

***( 12 புள்ளிகள்)***